தமிழ் நாடு அரசு

சுருக்கம்

நகர்மன்றத் தலைவர் பேரவை சந்தாத் தொகை - நகராட்சி நிதியிலிருந்து சந்தா தொகை செலுத்த நகராட்சிகளுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5)துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.704 நாள்:- 31.12.98.

படிக்கப்பட்டது.

1. தலைவர், நகர்மன்ற தலைவர் பேரவை, தமிழ்நாடு கடித நாள். 22.4.98.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண். 35127/98/எல்3 நாள். 24.11.98.

...

ஆணை:-

22.4.98 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்நாடு நகர்மன்ற தலைவர்கள் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் ஒன்றில், தமிழ்நாடு நகர்மன்ற தலைவர்கள் பேரவைக்கு ஒவ்வொரு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை நகராட்சி ரூ. 2000/- வீதமும் முதல் நிலை இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிகள் ஒவ்வொன்றும் ரூ. 1000/- வீதமும் நகர்மன்றம் மூலம் தீர்மானம் நிறைவேற்றி, சந்தாத் தொகை செலுத்த ஆணை பிறப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. அக்கோரிக்கையை ஏற்று, நகர்மன்ற தலைவர்கள் பேரவைக்கு ஆண்டு சந்தாவாக சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் ரூ. 2000/-ம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் ரூ. 1000/-ம் சம்பந்தப்பட்ட நகராட்சி நிதியிலிருந்து செலுத்த அனுமதித்து அரசாணை பிறப்பிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

3. இச்செயற்குறிப்பினை அரசு, நன்கு ஆய்வு செய்ததில், நகர்மன்ற தலைவர்கள் பேரவைக்கு ஆண்டு சந்தாவாக சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை நகராட்சிகள் ரூ. 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மற்றும் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் ரூ. 1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) சம்பந்தப்பட்ட நகராட்சி நிதியிலிருந்து செலுத்த அரசு அனுமதியளித்து இதன் மூலம் ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒம்/- எஸ். மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
தலைவர் தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்கள் பேரவை, ஆலந்தூர், சென்னை-16.
நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கு (பொது) துறை, சென்னை-9.
/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

ஒம்/.......
பிரிவு அலுவலர்

/உண்மை நகல்/உத்தரவின்படி/

கண்காணிப்பாளர். 99

22/1/99

அனுப்புநர்

திரு சான்வந்த் ராம், இ.ஆ.ப.
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம்,
சென்னை – 600 005.

பெறுநர்

அனைத்து நகராட்சி ஆணையர்/
நகர் மன்றத் தலைவர்

ஓ.மு.எண். 3333/99/(எல்3) நாள்:- 21.1.99.

ஐயா/அம்மையீர்,

பொருள்:- நகர்மன்றத் தலைவர் பேரவை – சந்தா தொகை – நகராட்சி நிதியிலிருந்து சந்தா தொகை செலுத்த நகராட்சிகளுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:- அரசாணை (ப) எண். 704/நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.12.98.

பார்வையில் காணும் அரசாணை நகல் ஒன்று தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஒம்/- ச. ஜெயராமன்,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

இணைப்பு:- மேற்படி

/உத்தரவின்படி/

கண்காணிப்பாளர் 21/1/99

21/1/99